இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நேற்று (20.07.2023) சென்னை மெரினா கடற்கரையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 7வது ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன் ஸ்ஷிப்2023, "கோப்பை யினை (Trophy) அறிமுகம் செய்தார். இந்த நிகழ்ச்சியில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமை செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி, ஹாக்கி இந்தியா தலைவர் பத்ம ஸ்ரீ டாக்டர் திலிப்டர்க்கி, செயலாளர் போலோநாத்சிங், பொருளாளர் சேகர்மனோகரன், மற்றும் ஒலிம்பியன் பாஸ்கரன், கோவிந்தா, முகமது ரியாஸ் ஆகியோர் உடன் உள்ளனர்.

மணிப்பூர் கொடூரம் குறித்து நேரில் ஆய்வு செய்ய

'இந்தியா' கூட்டணித் தலைவர்கள் மணிப்பூர் பயணம்!

நாளை செல்கின்றனர்!

இம்பால், ஜூலை 21- மணிப்பூர் கொடூரம் குறித்து நேரில் ஆய்வு செய்ய 'இந்தியா' கூட்டணித் தலைவர்கள் நாளை மணிப்பூர் செல்கின்றனர்.

மணிப்பூரில் கடந்த 80 நாட்களுக்கும் மேலாக பயங்கர வன்முறை நீடித்து வருகிறது. மணிப்பூரில் பழங்குடியினப் பெண்கள் இருவர், நிர்வாணமாக்கப்பட்டு இழுத்துச் சென்ற கொடூரம் நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இந்நிலையில், மணிப்பூர் கொடூரம் குறித்து நேரில் ஆய்வு செய்ய "இந்தியா" கூட்டணித் தலைவர்கள் நாளை மணிப்பூர் பயணம் செய்ய உள்ளனர்.

குடியரசுத் தலைவரைச் சந்தித்து முறையிடவும் "இந்தியா" கூட்டணித் தலைவர்கள் முடிவு செய்துள்ளனர்.

மணிப்பூர் கலவரம் குறித்து நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் பிரதமர் மோடி விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் "இந்தியா" கூட்டணி வலியுறுத்தியுள்ளது.

38 கட்சிகளுடன் பேச நேரம் இருந்த

பிரதமருக்கு மணிப்பூர் செல்ல நேரம் இல்லையா?

மல்லிகார்ஜுன கார்கே கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 21- 38 கட்சிகளுடன் பேச நேரம் உள்ள பிரதமர் மோடிக்கு, மணிப்பூர் செல்ல நேரம் இல்லையா? என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கேள்வி எழுப்பியுள்ளார்.

மோடி அரசும் பா.ஜ.க.வும் மணிப்பூர் மாநிலத்தின் நுட்பமான சமூக அமைப்பை அழித்து, ஜனநாயகத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் பெருங் குற்றமாக மாற்றியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஒன்றிய பா.ஜ.க. அரசை இந்தியா ஒருபோதும் மன்னிக்காது என்றும் மணிப்பூரைப் பற்றி நாடாளுமன்றத்தில் பேசி, ஒன்றியத்திலும் மாநிலத்திலும் பா.ஜ.க.வின் இரட்டை இயலாமைக்கு மற்றவர்களைக் குற்றம் சொல்லாமல், என்ன நடந்தது என்பதை நாட்டுக்கு எடுத்துரைக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியிருக்கிறார்.

38 கட்சிகளுடன் பேச பிரதமருக்கு நேரம் உள்ளது; ஆனால் மணிப்பூர் செல்ல பிரதமருக்கு நேரம் இல்லையா ? எனவும் மல்லிகார்ஜுன கார்கே கேள்வி எழுப்பியுள்ளார்.

திருச்சியில் 26-ஆம் தேதி பாக முகவர்கள் கூட்டம்! முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கிறார்!

கடலூர் கிழக்கு மாவட்ட பாக முகவர்கள் கலந்துகொள்வீர்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கை!

கடலூர், ஜூலை 21- முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் டெல்டா மண்டலத்திற்குட்பட்ட மாவட்டக் கழகங்களில் உள்ள, தொகுதியில் அடங்கி உள்ள வாக்குச்சாவடி நிலைக் குழு முகவர்கள்) பயிற்சி பாசறைக் கூட்டம் திருச்சியில் நடைபெறுகின்றது. இதில் கடலூர் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட தொகுதியிலுள்ள வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென வேளாண்மை உழவர்நலத் துறை அமைச்சர், கழக உயர் நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் டெல்டா மண்டலத்திற்குட்பட்ட மாவட்டக் கழகங்களில் உள்ள, தொகுதியில் அடங்கி உள்ள வாக்குச்சாவடி நிலைக் குழு முகவர்கள் பயிற்சி பாசறைக் கூட்டம் 26.7.2023 புதன் கிழமை அன்று காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை திருச்சி, ராம்ஜி நகர், கருமண்டபம் என்ற இடத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கடலூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட குறிஞ்சிப்பாடி, கடலூர், காட்டுமன்னார்கோவில், புவனகிரி, சிதம்பரம் ஆகிய 5 சட்டமன்ற தொகுதிகளின் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இதற்கான ஏற்பாட்டினை மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் ஏற்பாடுகள் செய்து உரிய நேரத்தில் அழைத்து வருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகளில்

முதியோர்கள் – மாற்றுத்திறனாளிகளுக்கு கட்டணச் சலுகை!

அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேட்டி!

சென்னை, ஜூலை 21 தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சுற்றுலா பயணத் திட்டங்களின் மூலம் 2022 -2023 நிதியாண்டில் 95,469 சுற்றுலா பயணிகள் சுற்றுலா பயணம் மேற்கொண்ட நிலையில், 2023 ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரையான 3 மாதங்களில் மட்டும் 40,248 நபர்கள் சுற்றுலா பயணம் மேற்கொண்டுள்ளார்கள் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னை சுற்றுலா வளாகத்தில் சுற்றுலா பயண பேருந்துகள் மற்றும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகளின் அறைகள் முன்பதிவு செய்வதற்கான புதுப்பிக்கப்பட்ட முன்பதிவு அலுவலகத்தினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி முன்னிலை வகித்தார்.

தொடர்ந்து தமிழ்நாடு சுற்றுலா தலைமை அலுவலகத்தில் 24 மணி நேரமும் (24×7) செயல்படும் சுற்றுலா உதவி மையம் (Tourism Help Desk) மற்றும் கட்டுப்பாட்டு அறையில் செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் செய்தியாளர்களிடம் பேசும் போது தெரிவித்ததாவது:-'

தமிழ்நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்கை அளித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை 1971-ஆம் ஆண்டில் உருவாக்கினார்கள். இந்த ஆண்டு முத்தமிழறிஞர் அவர்களின் நூற்றாண்டு கொண்டாடப்படுகின்றது. நாட்டின் அன்னிய செலாவணி வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றும் சுற்றுலாத்துறையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் ஓட்டல் தமிழ்நாடு என்ற பெயரிலான தங்கும் விடுதிகள், அமுதகம் என்ற பெயரிலான உணவு விடுதிகள், சுற்றுலாத் பயணத்திட்டங்கள், சுற்றுலா பேருந்து சேவைகள், படகு சேவைகள், தொலைநோக்கி இல்லங்கள் என சுற்றுலா பயணிகளுக்கு பல்வேறு சேவைகளை வழங்கி வருகின்றது.

கொரோனாவால் பாதிக்கப்பட்டு இருந்த சுற்றுலாத்துறை முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சிகளால் விரைவான வளர்ச்சியை பெற்று இந்தியாவிலேயே சுற்றுலாத்துறையில் முதன்மை மாநிலமாக விளங்கி வருகின்றது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழ்நாடு முழுவதும் 28 ஓட்டல்களை நேரடியாக நிருவகித்து வருகின்றது. இவற்றில் 473 குளிரூட்டப்பட்ட அறைகளும், 199 சாதாரண அறைகளும், மலைப்பகுதி சுற்றுலாத்தளங்களில் 172 அறைகளும் என மொத்தம் 845 அறைகள் பொதுமக்களுக்கு தங்கும் வசதி சேவையை வழங்கி வருகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக தங்கும் விடுதிகளில் முதியோர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு கட்டண சலுகைகள் அளிக்கப்படுகின்றது. மேலும் திருமணம் உள்ளிட்ட நிகழ்வுகளுக்கு மொத்தமாக அனைத்து அறைகளையும் பதிவு செய்பவர்களுக்கும், தொடர்ந்து 3 நாட்களுக்கு மேல் தங்குபவர்கள், வெவ்வேறு இடங்களில் செயல்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகளில் தொடர்ந்து 3 நாட்களாக தங்குபவர்களுக்கு பல வகையான கட்டண சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு-ஒகேனக்கல், மைசூர்பெங்களூர், குற்றாலம் மற்றும் மூணார் என மூன்று நாட்கள் செல்லும் சுற்றுலா பயண திட்டங்களும், சென்னைமாமல்லபுரம், காஞ்சிபுரம் மாமல்லபுரம், திருப்பதி, திருவண்ணாமலை, ரீபுரம் தங்க கோவில், புதுச்சேரி என ஒரு நாள் சுற்றுலா பயண திட்டங்களும். எட்டு நாட்கள் பயணம் செய்யும் தமிழ்நாடு சுற்றுலா, கோவாமந்த்ராலயம் சுற்றுலா பயண திட்டங்களும். 14 நாட்கள் பயணம் செய்யும் தென்னிந்திய சுற்றுலா பயண திட்டங்களும், யுனெஸ்கோ நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பழமையான பண்பாட்டு சின்னங்களை பார்வையிடும் சுற்றுலா பயண திட்டம் என பல்வேறு வகையான சுற்றுலா பயண திட்டங்கள் பொது மக்களின் வசதிக்காக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த பயண திட்டங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் இயங்கி வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகளில் தங்குவதற்கான அறை வசதியும், உணவு வழங்குதல் ஆகியவற்றை உள்ளடக்கி பயண திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சுற்றுலா பயண திட்டங்களை மேற்கொள்வதற்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் குளிர்சாதன வசதியுடன் கூடிய வால்வோ சொகுசு பேருந்துகள், உயர்தர சொகுசு பேருந்துகள், சாதாரண சொகுசு பேருந்துகள், 18 இருக்கைகளுடன் கூடிய சிறிய ரக சொகுசு பேருந்துகள் என மொத்தம் 14 சொகுசு பேருந்துகளை கொண்டுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சுற்றுலா பயணத் திட்டங்களின் மூலம் ஏப்ரல் 2022 முதல் மார்ச் 2023 வரையிலான ஒரு வருட காலத்தில் மொத்தம் 95,469 சுற்றுலா பயணிகள் சுற்றுலா பயணம் மேற்கொண்டார்கள். (திருப்பதி சுற்றுலா மேற்கொண்டவர்கள் - 83,897 நபர்கள்) [சென்னையில் இருந்து 79,244 நபர்கள், வெளிமாவட்டங்களில் இருந்து - 4,653 நபர்கள்]

2023 ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரையான 3 மாதங்களில் மட்டும் 40,248 நபர்கள் சுற்றுலா பயணம் மேற்கொண்டுள்ளார்கள். (திருப்பதி சுற்றுலா மேற்கொண்டவர்கள் - 36,636) [சென்னையில் இருந்து 33,284 நபர்கள், வெளிமாவட்டங்களில் இருந்து - 3,352]

சென்ற ஆண்டு (2022-23) நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி, சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக சுற்றுலாத் தலங்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகள், படகு குழாம்கள் மற்றும் பல்வேறு சுற்றுலாக்கள் குறித்த தகவல்கள், முன்பதிவு ஆகிய வற்றை சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கவும் மற்றும் சுற்றுலாவின்போது ஏற்படும் குறைகளை களைய உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவும் தமிழ்நாடு சுற்றுலா தலைமை அலுவலகத்தில் 24 மணி நேரமும் (24×7) செயல்படும் சுற்றுலா உதவி மையம் (Tourism Help Desk) மற்றும் கட்டுப்பாட்டு அறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு (2023-24) நிதி நிலை அறிக்கையில் திருப்பதி சுற்றுலா மற்றும் பிற சுற்றுலாக்களை இயக்குவதற்கு ஏற்படும் கூடுதல் தேவைகளை பூரத்தி செய்ய ரூ.2.80 கோடி செலவில் 43 இருக்கைகளுடன் கூடிய இரண்டு குளிர்சாதன வால்வோ சொகுசு பேருந்துகள் வாங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் பேருந்து வாங்க பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இதனைத்தொடர்ந்து சுற்றுலா வளாக கூட்டரங்கில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்கள், படகு குழாம்கள் குறித்த மேலாளர்கள் மற்றும் மண்டல மேலாளர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அரசு கூடுதல் செயலாளர் வே.முத்தையன், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பொதுமேலாளர் திருமதி.லி.பாரதிதேவி, முதன்மை கணக்கு அலுவலர் எஸ்.கணேஷ் கார்த்திகேயன், உதவி தலைமை மேலாளர் (ஓட்டல்கள்) சௌ.வெங்கடேசன் உள்பட மண்டல மேலாளர்கள், மேலாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் கலந்துகொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி

பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற கூட்ட நிகழ்ச்சி பற்றிய அறிவிப்பு

(தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 அத்தியாயம் - 4, பகுதி - 1 விதி எண்.156 (1) ன் கீழ்)

2023-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 28ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு மாநகராட்சி மன்ற கூடத்தில் மாமன்ற சாதாரண கூட்டம் நடைபெற உள்ளது. மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

செ.ம.தொ.இ / 837 / வரைகலை / 2023

மேயர்

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

இன்று (21.7.2023) நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நினைவு நாள்!

சிந்தையில் நின் சிலையன்றோ?

அண்ணாவின் நாடகத்தில்
அரங்கேறி மராட்டிய
மண்ணாளும் சிவாஜி
மாமன்னன் வேடமேற்றுக்
கண்களோ விரிந்திடக்
காதுகள் இனித்திடப்
பண்டு நீ நடித்ததனைப்
பார்த்த ஒரு பெரியார்தான்
தொண்டுசெய்து பழுத்தவர்
துலாக்கோலாய்ப்
பகர்பவர்
செண்டளித்துப்
பாராட்டி,
சிவாஜியே நீயென்று
விண்டனர்: அன்றுமுதல்
விளங்குகிறாய் சிவாஜியாய்!
எண்டிசையும் புகழ்மணக்க
இப்பெயரே இயற்பெயராய்க்
கொண்டாடி மகிழ்கின்றார்:
குலப்பேராய் மதிக்கின்றார்!

கலைஞரின் பராசக்தி
கனல்தெறிக்கும் உரையாடல்
இலையிங்கே பேசுதற்கு
இன்னொருவர் உனைப்போல!

சிலையாக நிற்பதே
சிறந்ததொரு நடிப்பென்று
கொலைவாளை வீசலே
கொண்டாடத் தக்கதென்று
விலையாகிக் கிடந்தவர்கள்
வெலவெலத்துப் போகவே
நிலையின்றி உயர்ந்தவர்கள்
நெஞ்சந்தான் கலங்கவே
தலைசிறந்த நடிகரெனத்
தமிழ்த்திரை வியந்திட
மலையுயரம்
சென்றுவிட்டாய்:
வானுயரம் தொட்டுவிட்டாய்:
கலையுலகில் நின்றுவிட்டாய்:
காலத்தை வென்றுவிட்டாய்!
அலையாக எழுகின்ற
ஆயிரம் உணர்ச்சிகள்
கலையாக நடிப்பிலே
காட்டிய உன் திறங்கண்டு
மலையாதார் யாரிங்கே!
மகிழாதார் யாரிங்கே!

அண்ணாவின் தம்பியாய்
அருங்கலைஞர் நண்பனாய்த்
திண்பெரியார்
தொண்டனாய்த்
திராவிடச் செல்வனாய்த்
தண்டமிழ் நாடெங்கும்
தாவிவரும் காவிரியாய்
வண்டமிழ் நீ பொழிய
வாய்திறந்து கேட்டவர்கள்
உண்டனர் செந்தமிழ்த் தேன்:
ஓங்கினர் உரிமைப்போர்!
கண்டவர்கள் உடனிருந்த
கயவர்கள் பகைநெஞ்சம்
கொண்டவர்கள்
விரித்தவலைக்
கூண்டிலே விழுந்துவிட்டாய்!
ஒண்டவந்த பிடாரிதான்
ஊர்த்தெய்வம் விரட்டினாற்போல்
தண்டூன்றி நின்ற உன்னைத்
தள்ளியன்றோ விட்டார்கள்!

இயக்கத்தின் வளர்ச்சிக்கோ
எத்தனையோ நாடகங்கள்
தயக்கமே இல்லாமல்
சம்பளமும் கேட்காமல்
வியக்கத்தான் பற்பல
வேடங்கள் ஏற்றன்று
வியர்வையைப் பொழிந்தவனே!
வெண்கலமாய் ஒலித்தவனே!
பயமின்றித் தன்மானம்
பகுத்தறிவு மொழிந்தவனே!
சுயமாக எழுந்தவனே:
சுடராக ஒளிர்ந்தவனே!
வயமாக மக்களை
வண்டமிழ் முழக்கத்தால்
இயல்பாக வளைத்தவனே!
எழுச்சியை வளர்த்தவனே!

புயலான உன்வளர்ச்சி
பொறுக்காத வஞ்சகர்கள்
அயராமல் கழகம்விட்டு
அப்புறப் படுத்திவிட்டார்!
மயலாகிக் குழம்பியே
மனமுடைந்து மாபெருந்
துயரந்தான் பட்ட நீ
சூழ்ச்சிதான் விளங்காமல்
அயலாரைச் சேர்ந்துவிட்டாய்:
அரசியலில் தீர்ந்துவிட்டாய்!
முயலாக முயன்றும்நீ
முடிவிலே சோர்ந்துவிட்டாய்!
வயலான உனைஅவர்கள்
வன்பாலை ஆக்கிவிட்டார்!
வயக்களிறு தடுமாறி
வன்குழியில் வீழ்ந்தது;
கயத்தாற்றுக் கட்டபொம்மன்
கதியேதான் நேர்ந்தது:
கயலொன்று தரைவந்த
கதையாகிப் போனது!

தரைதட்டும் கப்பலிலே
தாவிநீ ஏறிவிட்டாய்:
வரையளவு முயன்றும்உன்
வலிமையை இழந்திட்டாய்!
இரையாகும் வெள்ளாடாய்
இறுதியிலும் நீ பட்டாய்!
நுரையென்று தள்ளுவோம்:
நோன்பாக நீகொண்ட
திரையுலகச் சாதனைகள்
சிகரத்தின் சிகரமன்றோ!

செருவிலே மாவீரன்
சிவாஜிதான் வென்றதுபோல்
திரையிலே நீஒரு
சிவாஜியாய் வென்றுயர்ந்தாய்!

உனைப்போல நடிப்பதற்கோர்
உலகினிலே இன்னொருவர்
நினைத்தாலும் முடியுமா?
நிழலெங்கும் படியுமா?
முனைந்தாலும் இயலுமா!
முளைத்தாலும் வளருமா?
வனைந்தாலும் நில்லாதே:
வடித்தாலும் செல்லாதே:
புனைந்தாலும் வெல்லாதே:
புகன்றாலும் கல்லாதே!

நிழல்கூட நடிக்கின்ற
நீர்மையைப் பெற்றவனே!
குழலினிமை யாழினிமை
குரலினிமை கூற்றினிமை
முழவெழுந்தாற் போலவே
மூரியெழும் சிங்கத்தின்
முழக்கந்தான் உன்குரல்:
மூண்டெழும் வன்குழல்!

பேராசிரியர்
மா.செல்வராசன்

முந்நூறு படங்களிலே
முடிசூடி நாயகனாய்
ஐந்நூறு நடைநடந்தாய்:
அருநடிப்பின் மடைதிறந்தாய்:
தன்னுருவம் ஒன்றெனினும்
தாங்கியபல் வேடத்தால்
பன்னூறு தோற்றங்கள்
பளிச்செனக் காட்டினாய்:
நன்னூறு மாற்றங்கள்
நடிப்பாலே கூட்டினாய்:
முன்னேறி முன்னேறி
முழுமையை நாட்டினாய்:
பின்ஏராய் வருவோர்க்கும்
பெரும்பாடம் ஊட்டினாய்!

மின்னேறும் வானைப்போல்
மிசையேறும் கதிரைப்போல்
பொன்னேறும் மதியைப்போல்
பொழிலேறும் காற்றைப்போல்
நன்னீரும் நிலமும்போல்
நடிப்புத்தீச் சுடரைப்போல்
தன்னோர்ஒன் றில்லாத
தலைவனாய்த்
தமிழ்த்திரையில்
ஒன்றானாய்: நூறானாய்:
ஒருகோடி என்றானாய்:
நன்றானாய்: உயிர்த்தோடும்
நறும்புனல் ஆறானாய்!

எந்த ஒரு படத்தைத்தான்
ஈடற்றது என்றுரைக்க?
அந்திநிலா வெளிச்சத்தை
அளந்துரைப்பார் யாரிங்கே?
சந்தனக் குழம்பிலே
சரியான துளிஎது?
தந்தத்தில் எப்பக்கம்
தழைத்திடும் வெண்ணிறம்?
செந்தூரப் பூச்சிலே
சிவக்காத இடம்எது?
வெந்தழலில் கூடில்லா
வெற்றிடம் தான்எது?
இந்தநிலை தான் என்றும்!
ஏழ்நிறத்தில் எந்தநிறம்
சிந்தையைக் கவருமென்று
செப்பத்தான் இயலுமா?
சிந்தலை கடலிலே
சிறுதுளியும் நீர்தானே:
வந்தபடம் ஒவ்வொன்றும்
வானெட்டும் சீர்தானே!

தூர்ந்துவிட்ட குளமென்றும்
தூர்வாரா ஏரியென்றும்
போர்ந்துவிழும் கோட்டையென்றும்
பிளந்துவிட்ட கப்பலென்றும்
தேர்ந்திடாமல் தெளிந்திடாமல்
திடுமெனச் சென்றுநீ
சேர்ந்த இடம் உன்பெருஞ்
சிறப்புணராத் தேய்ந்த இடம்:
தீர்ந்த இடம் அதுவென்று
சிறிதும்நீ அறியவில்லை!

ஓர்ந்துணராது அரசியலில்
ஒதுக்குண்டாய்: ஆனாலும்
ஆர்ந்தெழுந்தாய்
திரையிலே:
ஆகாயம் வரையிலே!
சீர்ந்துயர்ந்தாய்:
நீஅமர்ந்த
சிம்மாசனம் இன்றுவரை
ஊர்ந்தமர ஒருவரின்றி
உள்ளதுதான் உண்மையன்றோ!

கலைஞர்தான் கடற்கரையில்
கலைவேந்தாய் நீ நிற்கும்
சிலையன்று நிறுவினார்:
சிங்கத்தமிழன் இந்தக்
கலைக்குரிசில் சிவாஜி
கணேசன்என் நண்பனென
நிலைகொள்ளாக் களிப்பிலே
நெஞ்சந்தான் பூரித்தார்!
மலைவேந்தன் குட்டுவனின்
மான உரை முழுவதும்
கலையாகப் பேசியே
காட்டினார் அன்றுனை!
உலகெலாம் கண்டுவந்த
உன்னழகுத் திருவுருவச்
சிலையினை அகற்றியே
சிறுமையினைச் செய்தவர்
நிலையென்ன ஆயிற்று?
நீள்இழிவாய்ப் போயிற்று!
புலைச்செயல் ஒருநாளில்
புதைகுழியே ஏகிற்று!
தலைமகன் தளபதிதான்
தாமாக விரும்பியே
கலைமகன் சிலையினைக்
கண்காண நிறுவினார்!
தலைமுறைகள் அவர்புகழ்
சாற்றிடும்: போற்றிடும்!

அடுத்தவர் அறியாமல்
அள்ளிஅள்ளிப் பலகோடி
கொடுத்தவன்நீ: உலகந்தான்
கொஞ்சமும் அறியவில்லை!
எடுத்துரையா திருந்துவிட்டாய்:
எவருரைக்க முயன்றாலும்
தடுத்துவிட்டாய்: வள்ளலெனத்
தம்பட்டம் அடிப்பதனை
விடுத்துவிட்டாய்!
விளம்பரக் கொடைஞரெனத்
தொடுத்துரைக்க விரும்பாமல்
தூய்மையாய்த்
துலங்கிவிட்டாய்!

கண்களால் ஆயிரம்
கலைகளைக் காட்டினாய்:
எண்ணாத உணர்ச்சிகள்
ஏராளம் தீட்டினாய்:
பண்ணாத வேடமில்லை:
பலவண்ணம் காட்டினாய்:
அண்ணாந்து நோக்கினும்
அகப்படாது இருந்துபிறர்
நண்ணாத உயரத்தை
நடிப்பிலே எட்டினாய்!

மண்ணாளும் அரசினும்
மறையாத நிலையன்றோ!
விண்ணாளும் நடிப்பாலே
விளைந்த உன் புகழன்றோ!
எந்நாளும் அழியாத
எழிலான கலையன்றோ!
இந்நாளும் பின்நாளும்
இலகிடும் மலையன்றோ!
அந்நாளும் உயர்ந்திருக்கும்
அரங்கம்உன் தலையன்றோ!
சென்றாலும் நின்றாலும்
சிந்தையில் உன் சிலையன்றோ!

நடிகருள் திலகமே:
நடிப்பிற்கோர் உலகமே!
அடிமுதல் முடிவரை
அருநடிப்பு இலகுமே!
படிமிசை நாளெலாம்
பார்க்கின்றோம் நின்னெழில்
வடிவந்தான்! வளர்நினைவில்
வாழ்கநீ வாழ்கவே!